**<u>நெல்லியாளம் நகர்மன்றத்தின் அவசர கூட்டம் வரும் 11.04.2022 ஆம் தேதி காலை திங்கட்கிழமை 11.00 மணிக்கு இந்நகராட்சியின் நகர்மன்றக் கூட்ட அரங்கில் நடைபெறவிருப்பதால் இக்கூட்டத்திற்கு நகர்மன்றத் துணைத்தலைவர் மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.</u>**

நகர்மன்ற தலைவர்,
நெல்லியாளம் நகராட்சி

**<u>பொருள் எண்.61</u>**

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சொத்துவரி:**

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டடுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் நெல்லியாளம் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதி நிலமை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | இல்லை |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | இல்லை |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | இல்லை |

| | | |
|---|---|---|
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | இல்லை |
| | **மொத்தம்** | இல்லை |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், நெல்லியாளம் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

| வ. எண் | தற்போதைய மண்டலம் | மண்டல மதிப்பு (ரூ) | புதிதாக நிர்ணயிக்கப்படும் மண்டல மதிப்பு | | |
|---|---|---|---|---|---|
| | | | பரப்பளவு சதுர அடி | உயர்வு செய்வதற் கான காரணி | புதிய மண்டல மதிப்பு (ரூ) |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 (col.3xcol.5) |
| 1 | A | 1.50 | 600 ச.அ வரை | 1.25 | 1.88 |
| | | | 601–1200 | 1.50 | 2.25 |
| | | | 1201–1800 | 1.75 | 2.63 |
| | | | 1801–க்கு மேல் | 2.00 | 3.00 |
| | | | குடியிருப்பு அல்லாதவை | | |
| | | | கல்வி நிறுவனம் | 1.75 | 2.63 |
| | | | தொழிற்சாலை | 1.75 | 2.63 |
| | | | வணிகம் | 2.00 | 3.00 |
| 2 | B | 1.20 | 600 ச.அ வரை | 1.25 | 1.50 |
| | | | 601–1200 | 1.50 | 1.80 |
| | | | 1201–1800 | 1.75 | 2.10 |
| | | | 1801–க்கு மேல் | 2.00 | 2.40 |
| | | | குடியிருப்பு அல்லாதவை | | |
| | | | கல்வி நிறுவனம் | 1.75 | 2.10 |
| | | | தொழிற்சாலை | 1.75 | 2.10 |
| | | | வணிகம் | 2.00 | 2.40 |
| 3 | C | 0.60 | 600 ச.அ வரை | 1.25 | 0.75 |
| | | | 601–1200 | 1.50 | 0.90 |
| | | | 1201–1800 | 1.75 | 1.05 |
| | | | 1801–க்கு மேல் | 2.00 | 1.20 |
| | | | குடியிருப்பு அல்லாதவை | | |
| | | | கல்வி நிறுவனம் | 1.75 | 1.05 |
| | | | தொழிற்சாலை | 1.75 | 1.05 |
| | | | வணிகம் | 2.00 | 1.20 |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி அளிக்கலாம்

**தீர்மானம் எண். 61 /2022, நாள்.11.04.2022 /அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.62**

நெல்லியாளம் நகராட்சியானது நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்நகராட்சி 1933 ஆம் ஆண்டு ஊராட்சியாக அமைக்கப்பட்டது. 1961 ஆம் ஆண்டு இரண்டாம் நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 1963–ஆம் ஆண்டு முதல் நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 1985 ஆம் ஆண்டு தேர்வு நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2004 ஆம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 09.08.2010 ஆம் ஆண்டு முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. நகராட்சியின் பரப்பளவு 94.28 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகராட்சியின் மக்கள் தொகை 44590 ஆகும். நகராட்சியானது 21 வார்டுகளாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்படி, மக்கள் தொகைக்கு ஏற்ப இந்நகராட்சியில் புதிய சந்தை ஏற்படுத்தப்பட வேண்டி உள்ளது. மேலும், இந்நகராட்சிக்கு தேவைப்படும் புதிய பணிகள் குறித்தான பிரேரணைகள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அவ்வப்போது கோரப்படும் படிவங்களில் புதிய சந்தை கட்டிடம் கோரி பூர்த்தி செய்து அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது 07.04.2022– அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மானிய கோரிக்கை எண்.34–ல் சட்ட மன்ற கூட்டத்தொடரில் இந்நகராட்சிக்கு சந்தை அமைத்தல் பணி மேற்கொள்ள மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களால் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதால், இந்நகராட்சிக்குட்பட்ட பொது மைதானத்திற்கு செல்லும் வழியில் உள்ள

பந்தலூர் வட்டம், நெல்லியாளம் கிராமம் I, சர்வே எண். 2298–ல் உள்ள 51.50 ஏர்ஸ் இடத்தில் சந்தை கட்டிடம் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி, நிலமானது வருவாய் ஆவணங்களில் அரசு புறம்போக்கு கிராம மேய்ச்சல் தரை என தாக்கலாகி உள்ளது. தற்போது இப்பகுதியானது கிராம புறத்திலிருந்து நகரமயமானதால், மேய்ச்சல் நிலமாக பராமரிக்க அவசியம் எழவில்லை. ஆகையால் நகர மக்களின் தேவைகேற்ப மேற்படி இடத்தில் இந்நகராட்சியால் புதிய சந்தை கட்டிடம் கட்டுவற்கு நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் முன் நுழைவு அனுமதி கோரி பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி அளிக்கலாம்

**தீர்மான எண். 62 /2022 நாள்.11.04.2022 / அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.63**

**பார்வை–** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் அலுவலக அலைபேசி செய்தி நாள்.31.03.2022

***** ******

பார்வையில் காணும் அலைபேசி செய்தியினை தொடர்ந்து, இந்நகராட்சியானது 94.28 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உடையதாகும். இந்நகராட்சியில் இரண்டு ஈப்பு வாகனங்கள் உள்ளது. அதில் ஒரு வாகனம் கழிவு செய்யப்படவுள்ளது. இந்நகராட்சி எல்லைக்குள் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை மழை காலங்களில் பழத்த மழை பெய்யும், அப்பொழுது ஆங்காங்கே மழை நீரால் சேதமடைந்த சாலைகள், கால்வாய்கள் ஆகியவற்றை நகர்மன்ற தலைவர், நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரால் பார்வையிட்டு சரிசெய்ய உடனடியாக அப்பகுதிகளுக்கு செல்ல வேண்டிய சூழ்நிலைகள் உள்ளது. மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களாலும் நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் அவர்களாலும் அவ்வப்போது நடத்தப்பட்டுவரும் ஆய்வு கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும், அரசு உயரதிகாரிகளின் ஆய்வின் போதும் மாற்றும் மாண்புமிகு அமைச்சர்கள் ஆய்வின் போதும் மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள் ஆய்வின் போதும் பல்வேறு இடங்களுக்கு செல்ல வேண்டி இருப்பதாலும், நெல்லியாளம் நகராட்சியானது இருமாநில எல்லைப்பகுதியில் இருப்பதாலும், உதகமண்டலம் மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்களது ஆய்வுக் கூட்டத்திற்கு செல்ல அதிக நேரம் ஆகின்ற காரணத்தாலும், நகராட்சி பொறியாளருக்கு ஒரு வாகனமும், வளர்ச்சி பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ள அத்தியாவசியமாக இருப்பதால் இரண்டு ஈப்பு வாகனங்களுக்கு (SCORPIO) CAI AUTO INDUSTRIES PVT LTD, UDHAGAMANDALAM கம்பெனியிலிருந்து விலைப்புள்ளி ஒரு SCORPIO வாகனத்திற்கு ரூ.2349938/–ற்க்கு பெறப்பட்டுள்ளது. ஆகவே இவ்விலைப்புள்ளியில் இரண்டு புதிய SCORPIO வாகனத்திற்கு ரூ.4699876/– ற்க்கு பணிகளின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவிசியம் கருதி இரண்டு ஈப்பு வாகனங்கள் வாங்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி அளிக்கலாம்

**தீர்மானம் எண். 63 /2022, நாள்.11.04.2022 / அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.64**

நெல்லியாளம் நகராட்சியானது நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்நகராட்சி 1933 ஆம் ஆண்டு ஊராட்சியாக அமைக்கப்பட்டது. 1961 ஆம் ஆண்டு இரண்டாம் நிலை பேரூராட்சியாக தரம் உயத்தப்பட்டது. 1963 ஆம் ஆண்டு முதல் நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 1985 ஆம் ஆண்டு தேர்வு நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2004 ஆம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 09.08.2010 ஆம் ஆண்டு முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. நகராட்சியின் பரப்பளவு 94.28 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகராட்சியின் மக்கள் தொகை 44590 ஆகும். நகராட்சியானது 21 வார்டுகளாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. நகராட்சி பகுதியில் மொத்த 2021–2022 ஆம் ஆண்டு சொத்துவரி குடியிருப்பு 11561 உள்ளது. நெல்லியாளம் நகராட்சியில் தற்பொழுது உள்ள பேருந்து நிலையமானது D Grade ஆகும். இதில் 12 பேருந்து நிறுத்தும் இடம் உள்ளன. மேலும் தற்போது பேருந்து நிலையத்தில் மொத்தம் 11 கடைகள் ஏலம் விடப்பட்டு கடைகள் நடத்தப்பட்டு வருகிறது.

**Table – II**

இந்நகராட்சியில் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி

| வ.எண் | வருடம் | மக்கள் தொகை |
|---|---|---|
| 1. | 1981 | 25446 |
| 2. | 1991 | 37787 |
| 3. | 2001 | 41837 |
| 4. | 2011 | 44590 |

**Table – III**

Arithmetic Increase Method-ன்படி

| வ.எண் | தலைப்பு | வருடம் | மக்கள் தொகை |
|---|---|---|---|
| 1. | Immediate | 2021 | 50990 |
| 2. | Intermediate design year | 2031 | 57,390 |
| 3. | Ultimate design year | 2041 | 63,790 |

இந்நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து மக்களுக்கும், எதிர்கால மக்கள்தொகையின் தேவைக்கேற்பவும், நெல்லியாளம் நகராட்சியில் பந்தலூர் பகுதியில் உள்ள பேருந்து நிலையத்தினை மேம்பாடு செய்தல் மிகவும் அத்தியாவசியமாகும். இப்பேருந்து நிலையமானது கேரளா எல்லைப்பகுதியில் அமைந்துள்ளது. மேலும் மாநிலம் விட்டு மாநிலம் செல்லும் வழியாகவும் உள்ளது குறிப்பாக கர்நாடகா, கேரளா மற்றும் நீலகிரி மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டத்திற்கு செல்லும் திருப்பூர், கண்ணியாகுமரி, சென்னை, சேலம், ஈரோடு மற்றும் திருச்சி போன்ற அனைத்து மாவட்டங்களுக்கும் இப்பேருந்து நிலையத்திற்கு வந்து தான் பேருந்தில் பயணித்து செல்ல வேண்டியுள்ளது. மேலும் பந்தலூர் பகுதியை சுற்றி உள்ள சுமார் 20–ற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கும் பந்தலூர் வழியாக தான் செல்ல வேண்டியுள்ளது. மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடமாக உள்ளது. இரு ஒரு மைய பகுதியாகும்.

நெல்லியாளம் நகராட்சியில் தற்போது இப்பேருந்து நிலையத்தின் இருக்கைகள் அனைத்தும் உபயோகமற்ற நிலையில் உள்ளது. குடிநீர் வசதி, மின்சார வசதி, இருக்கை வசதி, உள்புற மற்றும் வெளிப்புறம் செல்லும் வாயில் அமைக்க வேண்டும். முறையான நுழைவுவாயில் இல்லாததால், அனைத்து விலங்குகளும் இரவில் தங்கும் இடமாக உள்ளது. மக்களுக்கு பாதுகாப்பற்ற நிலை உள்ளது. ஆகவே இப்பணியின் அவசர அவசியம் கருதி இப்பேருந்து நிலையத்தினை சீர்செய்ய ரூ.40.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, இப்பேருந்து நிலையத்தை மேம்பாடு செய்ய மானியத் தொகை வழங்கவும், நிர்வாக அனுமதி வழங்குமாறும் பிரேரணையானது திருப்பூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வழியாக, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி அளிக்கலாம்

**தீர்மான எண். 64 /2022 நாள்.11.04.2022 / அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.65**

நெல்லியாளம் நகராட்சியானது நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்நகராட்சி 1933 ஆம் ஆண்டு ஊராட்சியாக அமைக்கப்பட்டது. 1961 ஆம் ஆண்டு இரண்டாம் நிலை பேரூராட்சியாக தரம் உயத்தப்பட்டது. 1963 ஆம் ஆண்டு முதல் நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 1985 ஆம் ஆண்டு தேர்வு நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2004 ஆம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 09.08.2010 ஆம் ஆண்டு முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. நகராட்சியின் பரப்பளவு 94.28 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகராட்சியின் மக்கள் தொகை 44590 ஆகும். நகராட்சியானது 21 வார்டுகளாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. நகராட்சி பகுதியில் மொத்த 2021–2022 ஆம் ஆண்டு சொத்துவரி குடியிருப்பு 11561 உள்ளது.

**Table – II**

இந்நகராட்சியில் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி

| வ.எண் | வருடம் | மக்கள் தொகை |
|---|---|---|
| 1. | 1981 | 25446 |
| 2. | 1991 | 37787 |
| 3. | 2001 | 41837 |
| 4. | 2011 | 44590 |

**Table – III**

Arithmetic Increase Method-ன்படி

| வ.எண் | தலைப்பு | வருடம் | மக்கள் தொகை |
|---|---|---|---|
| 1. | Immediate | 2021 | 50990 |
| 2. | Intermediate design year | 2031 | 57,390 |
| 3. | Ultimate design year | 2041 | 63,790 |

இந்நகராட்சியிலிருந்து சுமார் 3கி.மீ தொலைவில் நெல்லியாளம் நகராட்சி குப்பை கிடங்கு உள்ளது. அதன் அருகாமையில் உள்ள 1 ஏக்கர் இடத்தில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து மக்களுக்கும், எதிர்கால மக்கள்தொகையின் தேவைக்கேற்ப புதியதாக FSTP பணிக்கு விரிவான திட்ட அறிக்கை ரூ.250.00 இலட்சத்திற்கு தயார் செய்து, அதற்கான செலவினத்தை மானியமாகவும், இப்பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கவும் கோரி பிரேரணையானது திருப்பூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வழியாக, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி அளிக்கலாம்

**தீர்மான எண். 65 /2022 நாள்.11.04.2022 / அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.66**

நெல்லியாளம் நகராட்சியானது நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்நகராட்சி 1933 ஆம் ஆண்டு ஊராட்சியாக அமைக்கப்பட்டது. 1961 ஆம் ஆண்டு இரண்டாம் நிலை பேரூராட்சியாக தரம் உயத்தப்பட்டது. 1963 ஆம் ஆண்டு முதல் நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 1985 ஆம் ஆண்டு தேர்வு நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2004 ஆம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 09.08.2010 ஆம் ஆண்டு முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. நகராட்சியின் பரப்பளவு 94.28 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகராட்சியின் மக்கள் தொகை 44590 ஆகும். நகராட்சியானது 21 வார்டுகளாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. நகராட்சி பகுதியில் மொத்த சொத்துவரி குடியிருப்பு 11561இல் குடிநீர் வரிவிதிப்புகள் 900 ஆகும். அதில் 890 எண்ணிக்கை வீட்டு குடிநீர் இணைப்புகளும் 10 எண்ணிக்கை வணிக குடிநீர் இணைப்புகளும் உள்ளது. தொழில் நிறுவனம் குடிநீர் இணைப்பு ஏதும் இல்லை. மேலும் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்காக 296 எண்ணிக்கை பொது குடிநீர் குழாய்களும் உள்ளது.

| வ.எண். | விரபம் | வைப்புத் தொகை | மாதாந்திர கட்டணம் | குடிநீர் இணைப்பு எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | வீடு | 3000 | 50 | 863 |
| 2. | வணிகம் | 5000 | 100 | 10 |
| 3. | தொழில் | 10000 | 200 | 0 |

**Table – I**

**2021-2022-ன்படி தணிக்கை செய்யப்படாத விவரம் (Unaudited Report)**

| வ.எண் | தலைப்பு | வரவினம் ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | குடிநீர் வரி | 5.20 |
| 2. | சொத்துவரியில் குடிநீர் பங்குத்தொகை | 20.58 |
| 3. | இதர வருவாய் | 1.38 |
| | **மொத்தம்** | **27.16** |
| **வ.எண்** | **தலைப்பு** | **செலவினம் ரூ. இலட்சத்தில்** |
| 1. | ஊதியம் | 50.14 |
| 2. | மின்கட்டணம் (120 எண்ணிக்கை மின்மோட்டார்களின் மின்கட்டணங்களும் சேர்த்து) | 50.96 |
| 3. | வாகன பராமரிப்பு | 3.51 |
| 4. | இதர பராமரிப்பு செலவினம் | 52.28 |
| | **மொத்தம்** | **156.89** |

**Table – II**

இந்நகராட்சியில் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி

| வ.எண் | வருடம் | மக்கள் தொகை |
|---|---|---|
| 1. | 1981 | 25446 |
| 2. | 1991 | 37787 |
| 3. | 2001 | 41837 |
| 4. | 2011 | 44590 |

**Table – III**

Arithmetic Increase Method-ன்படி

| வ.எண் | தலைப்பு | வருடம் | மக்கள் தொகை |
|---|---|---|---|
| 1. | Immediate | 2021 | 50990 |
| 2. | Intermediate design year | 2031 | 57,390 |
| 3. | Ultimate design year | 2041 | 63,790 |

**1) திட்டத்தின் அவசியம்**

நெல்லியாளம் நகராட்சியில் தற்போது தேவாலா ஏரோடு, நீர்மட்டம் மற்றும் சோலமலை ஆகிய மூன்று இடங்களில் உள்ள தடுப்பணை மூலமாகவும், 95 எண்ணிக்கை திறந்த வெளிக்கிணறுகளில் மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டும் நேரிடையாக 4.10 எம்.எல்.டி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி 95 எண்ணிக்கை திறந்தவெளி கிணறுகளில் 10 எண்ணிக்கை அடர்ந்த வனத்துறை சார்ந்ததால் மின்இணைப்பு இல்லாமல் டீசல் என்ஜின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இந்நகராட்சியில் குடிநீர் சராசரியாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 65.96 LPCD வீதம் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வறட்சி காலங்களில் வாரம்

இரண்டு முறை அல்லது ஒரு முறை நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு 42 லிட்டர் வீதம் விநியோகம் செய்யப்படுகிறது. பெரும்பாலான திறந்தவெளி கிணறுகள் வறட்சி காலங்களில் குடிநீர் வற்றுவதால், வாடகை லாரி மூலமாகவும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது நகராட்சியில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 38512 மக்களுக்கு மட்டுமே குடிநீர் வழங்கப்படுகிறது. மீதமுள்ள மக்கள் அடர்ந்த வனப்பகுதியில் உள்ள நீர்ஆதாரத்தை பயன்படுத்துகிறார்கள்.

இந்நகராட்சியில் தற்போது உள்ள பொதுமக்களுக்கும், பெருகி வரும் மக்கள் தொகையின் அடிப்படையில் இன்னும் 20 ஆண்டுகளுக்கான தொலைநோக்கு பார்வையின்படி பாதுகாக்கப்பட்ட, சுத்திகரிக்கப்பட்ட வறட்சி காலங்களிலும் தங்கு தடையின்றி குடிநீர் வழங்குவதற்கு புதியதாக குடிநீர் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

**2) குடிநீர் பிரதான குழாய்**

தற்போது நகராட்சியில் திறந்தவெளி கிணறுகள், தடுப்பணைகள் மூலமாக குடிநீர் குழாய்கள் வழியே தரைமட்ட நீர்தேக்கத்தொட்டிகளுக்கு குடிநீர் உந்துக்குழாய்கள் மூலம் நீரேற்றம் செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் மேற்க்கண்ட திட்டங்களுக்கு 65mm, 50mm, 40mm, 32mm, 25mm, மற்றும் 20mm GI மற்றும் HDPE Pipe மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும் பொருத்தப்பட்டுள்ள குடிநீர் குழாய்கள் பல இடங்களில் கனரக வாகனங்களால் உடைக்கப்பட்டும், மேலாக பதிக்கப்பட்டுள்ள குழாய்கள் யானைகளால் சேதப்படுத்தப்பட்டும், பழைய குழாய்கள் துருப்பிடித்து உடைந்த நிலையில் நீர்கசிவு ஏற்பட்டு குடிநீர் வீணாகி செல்வதால், சீராக பல பகுதிகளுக்கு குடிநீர் வழங்க இயலவில்லை.

**3)பகிர்மான குழாய்**

நெல்லியாளம் நகராட்சி முழுவதும் மலை பிரதேசம் ஆகும். மேலும் இப்பகுதி மேடு பள்ளமாகவும், அனைத்து பகுதிகளும் ஏற்றத்தாழ்வாகவும் உள்ளதால் குடிநீர் பகிர்மான குழாய்கள் 50mm, 40mm, 32mm, 25mm, 20mm G.I மற்றும் HDPE Pipe மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் தற்போது புதிய திட்டத்தில் 100mm DI, 65mm, 50mm, 40mm, 32mm GI குடிநீர் குழாய்கள் மற்றும் Pumping Main Line 15500 M, Distribution Main 57750m, தடுப்பணை, நீர்த்தேக்கதொட்டி, மேல்நிலைநீர்தேக்க தொட்டி, மோட்டார் மற்றும் சுத்திகரிப்பு நிலையம் ஆகிய பணிகள் மேற்கொள்ள தற்போது புதிய திட்டம் தயார் செய்யப்பட வேண்டும்.

**4) தரைமட்ட நீர்தேக்கத்தொட்டி**

நெல்லியாளம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள தரைமட்ட நீர்தேக்க தொட்டிகள் பெரும்பாலும் மிகவும் பழுது ஏற்பட்டு நீர்கசிவுகள் உள்ளன. மேலும் தேவையான அளவிற்கும் கொள்ளளவும் குறைவாக உள்ளதாலும் புதியதாக தரைமட்ட நீர்தேக்கத்தொட்டிகள் கட்டப்படவேண்டும். தற்போது 11553 வீடுகள் இந்நகராட்சியில் உள்ளது. 4.10MLD Local Source பெறப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன்படி உத்தேசமாக 2025 ஆம் ஆண்டுகளுக்கு 5.68 MLD குடிநீரும், 2030 ஆண்டு வரை 7.60 MLD குடிநீரும் , 2040 ஆம் ஆண்டு 7.60 MLD குடிநீரும், 2050 இல் 9.81 MLD குடிநீரும் தேவைப்படுகிறது.

இடைவெளி பகுப்பாய்வின்படி தற்போது 4.10 MLD குடிநீரும் 2025 ஆண்டிற்கு கூடுதலாக 2.54 MLD தேவைப்படுகிறது. தற்போதுள்ள 11561 Assessment House Hold-ல் 900 மட்டுமே குடிநீர் இணைப்பு உள்ளது. மீதமுள்ள 10661 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு கொடுக்க போதுமான நிரந்தரமான குடிநீர் ஆதாரம் இல்லை.

**5) வீட்டு குடிநீர் இணைப்புகள்**

மேலும் குடிநீர் இணைப்புகள் பொதுக்குழாயினை தவிர்க்கவும், சீராக குடிநீர் விநியோகம் செய்யவும் அனைத்து குடிநீர் இணைப்புகளுக்கும் Flow Control Valve உடன் MDPE பொருத்தப்பட வேண்டும்.

இந்நகராட்சி பகுதியில் உள்ள பந்தலூர் , தேவாலா மற்றும் நாடுகாணி ஆகிய இடங்களில் தடுப்பணைகள் கட்டியும், மேம்படுத்தியும் மேற்படி நீர் ஆதாரத்தை கொண்டு நகராட்சி பகுதியில் உள்ள ஆமைக்குளம், நாடுகாணி, தேவாலா, பந்தலூர் மற்றும் உப்பட்டி ஆகிய முக்கிய மக்கள் வாழும் பகுதிகளுக்கு குடிநீர் தரைமட்ட நீர்தேக்க தொட்டி அமைக்கப்பட்டு அதன்மூலம் குடிநீர் விநியோகம் செய்யவேண்டும். நகராட்சியில் உள்ள அனைத்து மக்களுக்கும், எதிர்கால மக்கள்தொகைக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும், விரிவான திட்ட அறிக்கை ரூ.1725.00 இலட்சத்திற்கு தயார் செய்து, அதற்கான செலவினத்தை மானியமாக கோரியும், இப்பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்குமாறு கோரியும் பிரேரணையானது நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 66 /2022 நாள்.11.04.2022 / அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.67**

நெல்லியாளம் நகராட்சியில் புதியதாக சாலைகள் அமைக்க ரூ. 440.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, இப்பணிகளுக்கான மானியத் தொகை வழங்கவும், நிர்வாக அனுமதி வழங்குமாறும் பிரேரணையானது நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வழியாக, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | நீளம் /கிலோ மீட்டரில் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1) | முண்டக்குன்னில் சிமெண்ட் கான்கீரீட் சாலை அமைத்தல் (067006L063) | 416 மீ | 80.00 |
| 2) | கிளன்ராக் சாலை தார் சாலையாக அமைத்தல் (067016R069) | 860 மீ | 57.00 |
| 3) | புளியம்பாரா முதல் கோழிக்கொல்லி வரை தார் சாலை அமைத்தல் (067005R015) | 1371 மீ | 90.00 |
| 4) | ஏலமன்னா பகவதியம்மன் கோவில் சாலை தார் சாலையாக அமைத்தல் (067019R083) | 400 மீ | 27.00 |
| 5) | வாழக்கொல்லி எஸ்.டி காலனி சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் (067010L116) | 200 மீ | 27.00 |
| 6) | காட்டிமட்டம் சாலை தார் சாலையாக அமைத்தல் (067009R021) | 1971 மீ | 159.00 |
| | **மொத்தம்** | | **440.00** |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி அளிக்கலாம்

**தீர்மான எண். 67 /2022 நாள்.11.04.2022 / அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.68**

நெல்லியாளம் நகராட்சியில் பொதுக்கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடத்தை மறு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள 3 எண்ணம் சமுதாய கழிப்பிடங்கள் ரூ.21.30 இலட்சம் மற்றும் 1 எண்ணம் பொதுக்கழிப்பிடம் ரூ. 7.50 இலட்சம் ஆக மொத்தம் ரூ.28.80 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, மானியத் தொகை வழங்கவும், நிர்வாக அனுமதி வழங்குமாறும் பிரேரணையானது நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சதத்தில் |
|---|---|---|
| | **CT – 2022–2023** | |
| 1) | தேக்கம்பாடியில் சமுதாய கழிப்பிடம் மறு சீரமைப்பு செய்தல் | 6.25 |
| 2) | அத்திமாநகரில் சமுதாய கழிப்பிடம் மறு சீரமைப்பு செய்தல் | 5.75 |
| 3) | ஆமைக்குளம் மற்றும் கோழிக்கொல்லியில் சமுதாய கழிப்பிடம் மறு சீரமைப்பு செய்தல் | 9.30 |
| | | 21.30 |
| | **PT – 2022–2023** | |
| 1) | நாடுகாணியில் பொதுக்கழிப்பிடம் மறு சீரமைப்பு செய்தல் | 7.50 |
| | **மொத்தம்** | **28.80** |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி அளிக்கலாம்

**தீர்மான எண். 68 /2022 நாள்.11.04.2022 / அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண்.69

பார்வை– நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 748/08/குவ2 நாள்.21.09.200

**** ******

பார்வையில் காணும் சுற்றறிக்கையில் 2(ஊ))–ல் தெரிவித்துள்ளப்படி, புதிய குடிநீர் கட்டணத்திற்கு ஒவ்வொரு வருடமும் நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய தொகை முந்தைய ஆண்டின் 5 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும் (ஏப்ரல் 1–ம் தேதி முதல்) விண்ணப்பப்படிவம் எந்த நிதியாண்டில் வழங்கப்பட்டு தொகை செலுத்தப்படுகிறதோ அந்த நிதியாண்டிற்கான தொகை வசூலிக்கப்பட வேண்டும் என்பதற்கிணங்க 2022–2023 ஆம் ஆண்டிற்க்கு கீழ்கண்டவாறு தொகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல் சல்லி சாலை ரூ. | தார் சாலை ரூ. | சிமண்ட் சாலை ரூ. |
|---|---|---|---|---|
| 1) | 0 – 30 மீட்டர் நீளத்திற்கு | 1980 | 4243 | 4899 |
| 2) | 30 – 90 மீட்டர் நீளத்திற்கு | 3113 | 5376 | 5870 |
| 3) | மேற்பார்வை கட்டணம் | ரூ.1239/– | | |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி அளிக்கலாம்

தீர்மான எண். 69 /2022 நாள்.11.04.2022 / அனுமதிக்கப்பட்டது

ஒப்பம்

(திருமதி. சி.சிவகாமி.)

நகர்மன்ற தலைவர்,

நெல்லியாளம் நகராட்சி.

// உண்மை நகல் //

23/05/2022

ஆணையாளர்,

நெல்லியாளம் நகராட்சி.

23/5/22